| அ.வ.எண். | 82/2015 | சாட்சி | வா.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | சீதாராமையர் | நாள் | 04.12.2021 |
| தகப்பனார் பெயர் | சஞ்சீவி அய்யர் (எ) அன்னு அய்யர் | | |

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் 4, 5 பிரதிவாதிகள் வேண்டுமென்றே இனாம் நிலத்தை குத்தகை விடுவதற்காக டென்டர் அறிவிப்பு செய்ததாக நான் கூறியுள்ளது தவறு என்றால் ஆமாம். அ.வ.எண்.110/2001 வழக்கில் அந்த டென்டரை ரத்து செய்ததாக கூறியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த வழக்கை யார் தாக்கல் செய்தார் என்றால் ராமச்சந்திரய்யர் தாக்கல் செய்தார். அ.வ.எண்.110/2001–ன் தீர்ப்பு நகலை ஒப்படைக்கவில்லை என்றால் ஆமாம். அந்த தீர்ப்பில் என்ன கூறப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதில் என்ன கூறப்பட்டுள்ளது என்றால் அர்ச்சகர்கள் அனுபவித்து வரவேண்டும் என கூறப்பட்டுள்ளது. யார் யார் அனுபவித்து வரவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் அவர்களுடைய உரிமையை கடன்பத்திரத்தின் மூலம் விட்டுக்கொடுத்துவிட்டதாக கூறியுள்ள அந்த கடன்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிகளும்,3 ம் பிரதிவாதியும் வருடத்திற்கொருமுறை மாற்றி மாற்றி பூஜை செய்வதாக கூறுவதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. வாய்மொழியாக தான் பேசப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் என்றால் ஆமாம். 1 ம் பிரதிவாதி அ.வ.எண்.121/2000 வழக்கை 8 பேர்கள் மீது தாக்கல் செய்தார் என்றால் 4 பேர் மீது தாக்கல் செய்ததாக கூறுகிறேன். என்மீதும், என்னுடைய மகன் முரளி, கிருஷ்ணன், சித்தன், கண்ணையர், செந்தில்குமார், ராதாகிருஷ்ணன், வெங்கடேசன் ஆகியோர் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என்மீதும், முரளி மீதும், கிருஷ்ணன் ஆகியோர் மீது மட்டும் தாக்கல் செய்யப்பட்டது. கிருஷ்ணனும், சித்தனும் இவ்வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்றால் ஆமாம். அ.வ.எண்.121/2000 வழக்கில் புது வழக்கு தாக்கல் செய்ய அனுமதி வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அதன்பிறகு 1 ம் பிரதிவாதி எவ்வித வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அ.வ.எண்.103/1996–ன் வழக்குரை மற்றும் தீர்ப்பு நகல்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அ.வ.எண்.103/1996 வழக்கின் மேல்முறையீடு வழக்கு எண்.153/1999 ன் தீர்ப்பு

நகல்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வழக்கு மற்றும் மேல்முறையீடு இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்டதல்ல என்பதால் தான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த நந்தன வருடத்திற்கான அ.வ.236/2012 வழக்கின் தீர்ப்பு நகலை ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. மேல்முறையீட்டு உத்தரவையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.7 ல் கண்டுள்ள நபர்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். வா.சா.ஆ.7 நேரில் கொடுத்தேனா என்றால் தபால் மூலமாக கொடுத்தேன். தபால் மூலமாக அனுப்பியதாக கூறியதற்கு அஞ்சலக ஒப்புகை அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. அவ்வாறு ஒரு அறிவிப்பு அனுப்பவில்லை என்பதால் தான் அஞ்சலக ஒப்புகை அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ல் கண்டுள்ள விஜய வருடமும் முடிந்துவிட்டது என்றால் ஆமாம். வா.சா.ஆ.7 க்கு பதில் அனுப்பியுள்ளார்களா என்றால் பதில் வரவில்லை. சாட்சி தற்போது தன்னிச்சையாக பதில் வந்ததாக சாட்சியம் அளிக்கிறார். 14.04.2013 ல் வந்த பதிலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.8 தகவலறியும் உரிமைசட்டப்படி அனுப்பப்பட்ட மனுவில் நந்தன, விஜய, ஜய 3 வருடங்களுக்கு யார் யார் பூஜை செய்தார்கள் என்ற தகவல்களை கேட்டுள்ளேன் என்றால் ஆமாம். யார் யார் பூஜை செய்தார்கள் என்பது தெரியாததால் தான் வா.சா.ஆ.8 தகவல் கோரி அனுப்பியுள்ளேன் என்றால் நாங்கள் தான் பூஜை செய்துவந்தோம். இடையூறு செய்ததால் யார் பூஜை செய்கிறார்கள் என கேட்டு அனுப்பியுள்ளேன். தற்காலிகமாக பூஜை செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் 2006 ல் அவ்வாறு உத்தரவு போட்டார்கள். நான் பூஜை செய்யாததால் தான் யார் யார் பூஜை செய்கிறார்கள் என்ற கேள்வி கேட்டு வா.சா.ஆ.8 அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ல் கூறியுள்ள தகவல்கள் சரியானது என்றால் ஆமாம். 4 ம் பிரதிவாதி பூஜை செய்வதை தடுக்கிறார் என வழக்குரையிலும், சத்தியப்பிரமாண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 4 ம் பிரதிவாதி பூஜைமுறைகளை தடுக்கக்கூடாது எனவும் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் ஆமாம். என்னையும், 3 ம் பிரதிவாதியையும் தாவா கோவிலில் இருந்து விலக்கிவைத்தார்கள் என்றால் ஆமாம். அப்போது விலக்கி வைத்திருந்தார்கள். எழுத்துப்பூர்வமாக 5 ம் பிரதிவாதி கொடுத்துள்ளாரா என்றால்

இல்லை. 5ம் பிரதிவாதிக்கு போதிய ஒத்துழைப்பு கொடுக்காததால் தான் என்னை விலக்கிவைத்தார்கள் என்றால் சரியல்ல. மன்மத ஆண்டில் எவ்வளவு நாட்கள் பூஜை செய்தேன் என்றால் பூஜை செய்யவே விடவில்லை. ஆகவே தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். என்னை சார்ந்தவர்களும் பூஜை செய்தார்களா என்றால் இல்லை. என்னை விலக்கி வைத்ததால் எங்களுடைய கரையை சார்ந்தவர்கள் பூஜை செய்தார்கள் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி மன்மத வருடத்தில் 150 நாட்கள் பூஜை செய்தார் என்றால் இல்லை. வருடம் முழுவதும் 1ம் பிரதிவாதி தான் பூஜை செய்தார். மன்மத வருடம் எங்களுக்கு பூஜை செய்ய உரிமை உள்ளது என எழுத்துப்பூர்வமாக அறிவிப்பு கொடுத்தேனா என்றால் வாய்மொழியாக தான் கேட்டேன். ஜெய வருடத்திலும் எழுத்துப்பூர்வமாக கேட்டேனா என்றால் இல்லை. 1 முதல் 4 பிரதிவாதிகள் மட்டும் தான் பிரச்சினை செய்ததாக தற்போது வரை கூறிவருகிறேன் என்றால் இல்லை. 3ம் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரம் வேண்டாம் என விட்டுக் கொடுத்தேனா என்றால் அவர் இறந்து 1 வருடம் இருக்கும். அவர் இறந்ததற்கு நீதிமன்றத்தில் தெரிவித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் வேண்டாம் என விட்டுவிட்டோம். டிசம்பர் 2020ல் இறந்துவிட்டார் என நினைக்கிறேன். தாவா கோவில்களில் 6 குடும்பத்தினர் பூஜை செய்துவந்தனர் எனவும், அனைத்து குடும்பத்தினரையும் சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் அவ்வாறு பூஜை செய்யவில்லை. எனக்கும், 1, 2 பிரதிவாதிகளை தவிர மற்ற சிலருக்கும் பூஜை செய்யும் உரிமையுள்ளது என்றால் ஆமாம். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதால் அனைத்து தரப்பினர்களையும் சேர்த்திருக்கவேண்டும் எனவும், சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் பிரச்சினை செய்தவர்களை மட்டும் சேர்த்துள்ளோம். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கூலிப்படை உள்ளதா என்றால் உள்ளது. கூலிப்படை வைத்து பூஜை செய்வதை தடுப்பதாக காவல்துறையில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எந்த தேதி, மாதம், வருடத்தில் கூலிப்படை வைத்து தடுத்தார்கள் என்றால் மன்மத வருடத்தில் தடுத்தார்கள். நான் கூறுவது தவறு எனவும், 1 முதல் 3 பிரதிவாதிகள் அர்ச்சகர்கள் எனவும், அவர்கள் கூலிப்படையை வைக்கவில்லை எனவும், சரியான முறையில் தான் பூஜை செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. பூஜை உரிமை உண்டு என விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல்

செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. அரசாங்கம் மாத சம்பளம் எங்களுக்கு கொடுப்பதில்லை. வா.சா.ஆ.1க்கும் வழக்கு கோவிலுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் அவ்வாறு இல்லை. வா.சா.ஆ.1ல் எந்த வருடம் வருமானம் வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நீண்ட வருடங்கள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.2 எந்த நிலத்திற்கு கொடுக்கப்பட்டது என அதில் குறிப்பிடவில்லை என்றால் நாங்கள் ஓட்டிக்கொண்டிருக்கும் நிலத்திற்கு கொடுப்பார்கள். வா.சா.ஆ.3 முதல் 5 வரையிலான வீட்டு வரி ரசீதுகளுக்கும், வழக்கு கோவிலுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் அது வீட்டு வரி. வா.சா.ஆ.12ல் கூறியுள்ள வழக்கு குறித்து எனக்கு தெரியும். அந்த வழக்கில் கூறியுள்ள பாலகிருஷ்ணய்யர், பாலு, ராமகிருஷ்ணன், சீனிவாசன் ஆகியோர் இவ்வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்றால் ஆமாம். அந்த வழக்கை நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். அந்த வழக்கு இவ்வழக்கு 1ம் பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதாலும், 1, 2 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளை தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் எனவும், எனவே வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.